இலங்கை வங்கியினால் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட துணை நிறுவனமான BOC IT சொலூஷன்ஸ் (வரையறுக்கப்பட்ட) நிறுவனம் கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, துடிப்பான மற்றும் விளைவுகள் சார்ந்த மனப்பான்மையுடைய இளம் நபர்களை எதிர்பார்க்கின்றது.

தொழில்நுட்ப உதவி நிர்வாகி (ஒப்பந்த அடிப்படை)

1. கல்வித் தகைமைகள்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் தகவல் தொழில்நுட்பம் அல்லது அது தொடர்பான துறைகளில் இளங்கலைமாணிப் பட்டம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு (01) வருட டிப்ளோமா

(தயவு செய்து உங்கள் விண்ணப்பத்துடன் பிரதிகளை இணைக்கவும்).

2. தொழில்முறை தகுதிகள்

- மைக்ரோசொப்ட் விண்டோஸில் ஏதேனும் சான்றிதழ் இருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

3. கடந்த கால பணி அனுபவம்

- கணினி, டெஸ்க்டொப் மற்றும் ATM/CRM வன்பொருள்களை நிர்வகிப்பதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம்
- ATM/CRM/CDM இன் உள்ளகக் கூறுகள் பற்றிய சிறந்த அறிவு
- வன்பொருள் பழுதுபார்ப்புத் துறையில் நேரடி அனுபவம்
- இலத்திரனியல் உபகரணத் துறையில் அனுபவம்
- செயற்பாட்டு முறைமைகள், தொழில்நுட்ப நெறிமுறைகள் மற்றும் தொழில்துறை தரநிலைகள் குறித்த நடைமுறை அறிவு
- கருவிகள், பாகங்கள் மற்றும் துணை உபகரணங்களை இயக்கும் திறன்
- தொழில்நுட்பக் கைத்தொழில்கள் மற்றும் செயற்பாட்டு வழிகாட்டுதல்களைப் புரிந்துகொண்டு அவற்றைப் பின்பற்றும் திறன்

4. ஏனைய தன்மைகள்

- வாடிக்கையாளரைக் கவரும் சேவை மனப்பான்மை மிக்கவர்
- சிக்கலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் திறன்
- பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றைத் திறம்பட செயற்படுத்தும் திறன்
- சிறந்த எழுத்து, பேசும் ஆற்றல் மற்றும் தனிநபர்களுடனான தொடர்புத் திறன்கள்
- ATM/CRM மற்றும் மென்பொருள் தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்து தீர்க்கும் திறன்

5. வயது எல்லை

இறுதித் திகதியின்படி 30 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருத்தல்

6. வேலைவாய்ப்பு வகை

- நிலையான கால ஒப்பந்தம்

7. ஒப்பந்த காலம்

- மொத்த ஒப்பந்த காலம் 03 ஆண்டுகள் (வருடாந்த செயற்திறன் மீளாய்வுக்கு உட்பட்டது)

8. சம்பள அளவு

- பேசித் தீர்மானிக்கப்படும்; விண்ணப்பதாரரின் சுயவிவரத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப நடைமுறை

- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, அனைத்துக் கல்விசார் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை இணைத்து, காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்பட்ட பதவியைக் குறிப்பிட்டு, கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு **2026/11/25** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பொருத்தமான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பிழையான தகவல்களைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எந்தவித மேலதிக அறிவித்தலும் இன்றி ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

பிரதம நிறைவேற்று அதிகாரி
பி ஓ சி மனேஜ்மன்ட் அன்ட் சப்போட் சேர்விசஸ் பிறைவேற் லிமிடெட்
(வரையறுக்கப்பட்ட நிறுவனம்)
18வது மாடி இலங்கை வங்கி - தலைமை அலுவலகம்,
'BOC சதுக்கம்', இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 476 4891
மின்னஞ்சல்: career@bocits.lk

BOC IT Solutions (Pvt) Ltd
(A fully owned subsidiary of the Bank of Ceylon)

• எந்த வகையிலான விளம்பரம் செய்து ஆதரவு கோருதலும் உடனடி தகுதியின்மையாகக் கருதப்படும். • தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. • தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான உரிமைகளையோ அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ உரிமை உள்ளது.